# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே
# தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023
# திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 7

பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல். குறள்களின் பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள் 45)

குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

3. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (குறள் 975)

செயற்கரிய செயல்களை ஆற்ற வல்லவர்கள் பெருமைக்குரியவர்கள்.

4. அற்றார் அழிபசி தீர்த்தல் அ:.தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (குறள் 226)

பொருட்களைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பது போல, நாம் பசித்திருப்போருக்கு உணவளித்து நல்லறங்களைச் சேர்ப்போம்.

5. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் 100)

இனிய சொற்கள் இருக்கும்போது கடுமையான சொற்களைக் கூறுவது ஒரு மரத்தில் பழங்கள் இருக்கும் போது அதனை விட்டுவிட்டுக் காய்களைப் பறித்து உண்பதைப் போன்றதாகும்.

6. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (குறள் 291)

வாய்மை என்று சொல்லப்படுவது யாது என்றால் பிறருக்குத் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

7. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (குறள் 108)

ஒருவர் செய்த நல்ல செயலை மறக்கக்கூடாது. அவர் செய்த தீய செயலை அப்பொழுதே மறப்பது நன்று.

8. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். (குறள் 17)

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலேயே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.